# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/16 - 2022 ජනවාරි මස 11 වැනි අඟහරුවාදා - 2022.01.11

*2262/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டு முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகளை பிரகடனப்படுத்துகின்றேன்.*

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2022, சனவரி 11.*

**ஒழுங்கு விதிமுறைகள்**

1. *இவ் ஒழுங்கு விதிகள் "2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தர நிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாடு) ஒழுங்கு விதிகள்" என அழைக்கப்படும்.*

2. *இவ் ஒழுங்கு விதிகள் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைபடுத்தப்படும்.*


1A - PG 5708 — 460 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தர நிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாடு) ஒழுங்கு விதிகள் - 2017 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் I ஆவது அட்டவணையில், கீழ்க் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான குறிப்புக்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | II ஆவது நிரல் ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு | III ஆவது நிரல் பொருட்கள் விபரம் | IV ஆவது நிரல் தரம் |
|---|---|---|---|
| 21 | 1701.14.00 | சிவப்பு சீனி | இலங்கைத் தரம் 883 சிவப்பு சீனிக்கான நியமக் குறியீடு |
| 22 | 1701.99.10<br>1701.99.20<br>1701.99.90 | வெள்ளைச் சீனி மற்றும் ஐஸின் சீனி | இலங்கைத் தரம் 191 சிவப்பு சீனிக்கான நியமக் குறியீடு |

4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு (தர நிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாடு) ஒழுங்கு விதிகள் - 2017 பிரசுரிசிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் I ஆவது அட்டவணையில், கீழ்க் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பாக குறிப்புக்கள் இத்தால் உள்ளடக்கப்படுகின்றன.

5. இவ்வர்த்தமானிப் பத்திகையின் I ஆவது அட்டவணையின் தொடர் இலக்கம் 128 இன் கீழ் உள்ள ஏதேனும் பொருட்களுக்கான தர நிர்ணயச் சான்றிதழ் ஒன்றினை விநியோகிப்பதற்கு இரசாயன கூட வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களில், இலங்கை தர நிர்ணயச்சபையின் மூலம் தரப்படுத்தப்பட்ட அவ்வாறான இரசாயன கூட வசதிகளை நிறுவும் வரை, அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் திகதிய 2064/ 34 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மாத்திரமே ஆகும்.

6. மேலே உள்ள ஒழுங்கு விதி 5 இற்கு மோசடி செய்து தொடர் இலக்கம் 128 இன் கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள ஏதேனும் ஒரு பொருளினை இறக்குமதியாளர்கள் மூலம் இறக்குமதி செய்யப்படுமாயின், சுங்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக அனுமதி வழங்கப்படாததோடு, அனுமதியினை நிராகரித்த திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் (30) அப்பொருட்களை மீள ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும்.

**I ஆவது அட்டவணை**

| தொடர் இலக்கம் | II ஆவது நிரல் ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு | III ஆவது நிரல் பொருட்கள் விபரம் | IV ஆவது நிரல் தரம் |
|---|---|---|---|
| 123 | 1701.12.10<br>1701.12.90<br>1701.13.00<br>1701.14.10<br>1701.14.90<br>1701.91.30<br>1701.91.90 | சிவப்பு சீனி | இலங்கைத் தரம் 883 சிவப்பு சீனிக்கான நியமக் குறியீடு |
| 124 | 1701.91.10<br>1701.91.20<br>1701.99.10<br>1701.99.20<br>1701.99.30<br>1701.99.40 | வெள்ளைச் சீனி மற்றும் ஐஸின் சீனி | இலங்கைத் தரம் 191 வெள்ளைச் சீனிக்கான நியமக் குறியீடு |

| தொடர் இலக்கம் | II ஆவது நிரல் ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு | III ஆவது நிரல் பொருட்கள் விபரம் | IV ஆவது நிரல் தரம் |
|---|---|---|---|
| 125 | 1701.99.90 | ஏனையவை | இலங்கைத் தரம் 883 சிவப்பு சீனிக்கான நியமக் குறியீடு இலங்கைத் தரம் 191 வெள்ளை சீனிக்கான நியமக் குறியீடு |
| 126 | 2711.19.10 | பெற்றோலிய திரவ வாயு | இலங்கைத் தரம் 712 பெற்றோலிய திரவ வாயுக்கான தர நியமக் குறியீடு |
| 127 | 3917.31.10<br>3917.39.10<br>4009.21.10<br>4009.22.10<br>4009.31.10<br>4009.32.10<br>4009.41.10<br>4009.42.10<br>8307.1010<br>8307.90.10 | பெற்றோலிய திரவ வாயுக்கான சொடனல் மற்றும் சொடனல் சேர்வை | இலங்கைத் தரம் 1172 பெற்றோலிய திரவ வாயுக்கான சொடனல் மற்றும் சொடனல் சேர்வைக்கான நியமக் குறியீடு |
| 128 | 8481.10.10 | பெற்றோலிய திரவ வாயு சிலிண்டருடன் கூடிய பயன்படு த்தப்படுகின்ற மஞ்சள் நிற இணைப்புக்கள் | இலங்கைத் தரம் 1184 பெற்றோலிய திரவ வாயுக்கான சிலிண்டருடன் கூடிய பயன்படுத்தப்படுகின்ற மஞ்சள் நிற இணைப்புக்களுக்கான நியமக் குறியீடு |
| 129 | 8481.10.20 | பெற்றோலிய திரவ வாயுக்கான பொருட்கள் மற்றும் தன்னியக்கமாக மாறுபடுகின்ற உபகரணங்கள் | இலங்கைத் தரம் 1180 பெற்றோலிய திரவ வாயுக்கான பொருட்கள் மற்றும் தன்னியக்கமாக மாறுபடுகின்ற உபகர ணங்கள் நியமக் குறியீடு |

EOG 1 - 0145

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.